

# அம்பேத்கர் மக்கள் இயக்கம்

நிறுவனர் : டாக்டர் **வை. பாலசுந்தரம்**, முன்னாள் மேயர்

தலைவர் : மாண்பமை **வை. ராமலிங்கம்**, BSc, BL



**இளமுருகு முத்து** BE, MBA (Stanford University, USA)
செயல் தலைவர்

## PRESS RELEASE

வண்ணாரப்பேட்டை தடியடி சம்பவம் இந்திய ஜனநாயகத்தின் குரலை நெறிக்கும் செயல். அம்பேத்கர் மக்கள் இயக்கம் , கண்டனம்.

. இது குறித்து

அம்பேத்கர் மக்கள் இயக்கச் செயல்தலைவர் **இளமுருகு முத்து** வெளியிட்ட

## அறிக்கை

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக சாதி, சமய வேறுபாடின்றி போராடி வரும் அனைத்துத் தரப்பு மக்கள் மீதும் காவல்துறை தாக்குதல் நடத்துவது கடும் கண்டனத்துக்கு உரியதாகும் என அம்பேத்கர் மக்கள் இயக்க செயல் தலைவர் இளமுருகு முத்து தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை அளிக்கும் வகையில் குடியுரிமை சட்டத்தில் மத்திய அரசு திருத்தம் மேற்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து டெல்லியில் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சென்னை வண்ணாரப்பேட்டையில் இஸ்லாமியர்கள் நேற்று மாலை போராட்டம் நடத்தினர்.

போக்குவரத்து இடையூறாக நடத்திய இந்தப் போராட்டத்தை விட்டு கலைந்து செல்லுமாறு காவல்துறையினர் அறிவுறுத்தினர். அதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர். அப்போது இருதரப்பினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து போலீஸார் அவர்கள் மீது தடியடி நடத்தினர். அதற்கு அவர்களும் போலீஸார் மீது கல்வீசியதாக கூறப்படுகிறது.

போலீஸார் நடத்திய தடியடி சம்பவத்துக்கு அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அம்பேத்கர் மக்கள் இயக்க செயல் தலைவர் வெளியிட்ட அறிக்கையில், சென்னை வண்ணாரப்பேட்டை போராட்டத்தை போலீஸ் உரிய முறையில் கையாளவில்லை. காவல் இணை ஆணையர் நிலைமை தவறாக கையாண்டதால் வன்முறை ஏற்பட்டது.

போராட்டத்தை உரிய முறையில் கையாண்டிருந்தால் மக்கள் மீதான வன்முறையை தவிர்த்திருக்கலாம். வண்ணாரப்பேட்டை போராட்டம் குறித்து விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என தெரிவித்தார்

6/39, தி. நகர் சென்னை - 600017; தொலைபேசி 9591386093; மின்னஞ்சல் : muthu.ilamurugu@gmail.com